# விடியல்

## The Dawn


இதழ்-79, நவம்பர்-2015

கௌரவ ஆசிரியர்

முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

ஆசிரியர்

முனைவர். சி. ஆர். சுரேஸ்
துறைத்தலைவர்

இணையாசிரியர்

முனைவர் த. சுந்தரராஜ்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| திரு. வீ. முருகானந்தம் | முனைவர் த. கண்ணன் |
| திருமதி ச. சாந்தி | திரு. ப. ராஜேஷ் |
| முனைவர். து. சரஸ்வதி | முனைவர் பா. ராஜேஷ் |
| முனைவர். ந. சங்கீதா | முனைவர். ம. லோகேஸ்வரன் |
| திரு. செ. தங்கராஜ் | திரு. மு. சதீஸ்குமார் |
| முனைவர் முப்பிடாதி | திருமதி. பிரதிபா |

வெளியீடு:

**தமிழ்த்துறை**

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


## தலையங்கம்

### *சகிப்புத்தன்மையும் உலக அமைதியும்*

*அகிம்சை மற்றும் சகிப்புத்தன்மையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், ஐ.நா., சபையால் ஆண்டுதோறும் நவ.16-ம் தேதி சர்வதேச சகிப்புத்தன்மை தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.*

*சமூகத்தில் சகிப்புத்தன்மை இல்லாததால் ஏற்படும் தீமைகள் குறித்தும், அனைவரும் அன்பு, சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் ஒருவருக்கு ஒருவர் வன்முறையின்றி விட்டுக்கொடுத்து நட்புடன் வாழ்ந்தால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கம். ஒவ்வொருவரும் மற்றவரின் அடிப்படை உரிமை, கருத்துகள், சுதந்திரம், கலாசாரம், மத நம்பிக்கை போன்றவற்றை அங்கீகரிக்கவும், மதிக்கவும் வேண்டும் என்பதை இத்தினம் வலியுறுத்துகிறது.*

*ஒரு மனிதன் சக மனிதனை மதித்தல், அவனின் உரிமைகள், சுதந்திரத்தை மதித்தல், ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் மொழி, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்து அவர்களின் உரிமைகளில் தலையிடாமல் இருப்பது சகிப்புத்தன்மை என விளக்கம் கொள்ளலாம். சகிப்புத்தன்மை என்பது ஜாதி, மத, இன, மொழி உணர்வுகளால் வரும் பற்று அல்ல, மாறாக அது*



ஒவ்வொருவரின் மனதிலிருந்து எழும் வாழ்வியல் நெறி. அந்த உணர்வை எந்த ஒரு சமூக நம்பிக்கைகளாலும், நிறுவனங்களாலும், அரசாலும் உருவாக்க முடியாது.

இந்திய அரசியலமைப்பின் ஆன்மாவான முகவுரை "இந்தியா ஒரு சமயச்சார்பற்ற சகிப்புத்தன்மை கொண்ட நாடு" என விளக்குகிறது.

கருத்து வேறுபாடுகள் எழுதல் என்பது பகுத்தறிவு உலகில் சகஜமான ஒன்று. ஆனால் வேறுபாடுகளை களைவதற்கான வழி அறவழியாக இருக்க வேண்டும். சகிப்புத் தன்மையற்றவர்களின் தேர்வே வன்முறை மார்க்கம். வன்முறை என்னும் வாள் முனையில், யாருடனும் நல்லுறவு பேண இயலாது; யாருக்கும் நல்வாழ்க்கை வழங்க இயலாது. எவரிடம் விமர்சனங்களை தாங்கிக் கொள்ளும் சக்தி இருக்கிறதோ, அவரே சகிப்புத்தன்மையுடையவர். அவர் தன்மீதான விமர்சனங்களுக்கு அறவழியிலேயே விளக்கங்களை தருகிறார். தன் தவறுகளை பிறர் சுட்டிக் காட்டும் போது, பொறுமையுடனும் பகுத்தறிவுடனும் அதை சரிசெய்ய முயல்பவரே சகிப்புத்தன்மையுள்ளவர்.

இன, மத சச்சரவுகள், வகுப்பு பூசல்கள் ஆகியவற்றை இல்லை என மறுக்கவோ அல்லது அலட்சியப்படுத்தவோ முடியாது. ஆனால் இவற்றுக்கான தீர்வை சமாதான முறையில், சகிப்புத்தன்மை உணர்வுடன் நாம்தான் காண வேண்டும். உலக அளவில் சமாதானத்தின் அவசியம் உணரப்பட்டால்தான் சகிப்புத்தன்மை வளரும். இதற்கான முயற்சி ஜாதி, மத, இன பேதமின்றி அனைவரிடத்திலி ருந்தும் தொடங்கப்பட வேண்டும்.

பல்வேறு மதங்கள், மொழிகள், இனங்கள், பிராந்தியங்கள் போன்ற பகுப்புகளை எளிதில் கடக்கும் மனித நேயத்தை நம் குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும் போதிப்பதன் மூலம் நம் சமூகத்தில் சகிப்புத்தன்மை வளரும்.

# உள்ளடக்கம்


- கவிதை......................................................................04-09
- சிறுகதை....................................................................10-12
- கட்டுரை....................................................................12-25
- பொது அறிவு..........................................................26-30
- கருத்தரங்க அழைப்பிதழ்....................................31-32

# கவிதைகள்

## வறுமை

எங்கும் வறுமை...
எதிலும் வறுமை...

தங்க இடமின்றித்
தவிக்கும் வறுமை..
தாகத்திற்குக் கூடத்
தண்ணீர் இல்லாமல்
தவிக்கும் வறுமை...!!

பெறுவார்
பேணிக் காப்பார் என்று
பாடிய வள்ளுவன் வாய்மொழியே
தவறாகிவிட்டதே...

வறுமையின் பிடியில்
வாடுபவர், காப்பாற்று...!
ஏன் என்று கேப்பாரற்று...!

வாழ்க்கையில் வறுமை
என்பது ஒரு பாகம்
உண்ண உணவு இல்லை
ஆனால் அதுவே பலரது
வாழ்விற் தீராத சோகம்...!

கருவில்
சுமந்து ஏழைத்தாய் கதறி துடித்து
தான் பெற்றெடுத்த பிள்ளையை
வறுமை எனும் தீய்க்கு
இறையாக்குகிறாள்.

வாழப் பிறந்தவன் வாழ்கிறான்.
ஆளப் பிறந்தவன் ஆள்கிறான்.
ஆனால்...!
ஏழ்மையின் பிடியில் வளர்ந்தவன்
தன் வாழ்க்கையை வாழாமல்
இழக்கிறான்...!!

வறுமையை ஒழிக்க
தன்னம்பிக்கை வேண்டும்.
ஆனால்
எவ்வளவு இருந்தாலும்
தட்டு நிறையாது...

உழைப்பைக் கொண்டு
வறுமையை விரட்டலாம் என்றால்
தன் உழைப்பைத் தாராளமாகப்
பயன்படுத்தி
தடம் மாற்றும் சுயநலவாதிகளின்
எண்ணிக்கைக்கு அளவேயில்லை..!
எனும் போது வருமையை ஒழிக்க
வாய்ப்பே இல்லை....!

அன்றாடத் தேவைகளை
நிறைவேற்ற முடியாமல் தவிக்கும்
ஏழையின் வாயில் கதவில்
அனுமதியின்றி நுழையும்
வறுமையின்
நிறம் கருப்பு...!!
அந்த கருப்புக் கள்வனைக் கொல்ல

ஏழைக்கு தேவையான ஆயுதம் தான் பணம்..!

ஆனால், அந்த ஆயுதத்தைப் பெற அவனது ஆயுட்காலம் போதாது...

ஏழையை விட்டுப் பிரியாது
ஏழையின் ஏழ்மை...
ஏழையின் கனவில் வரும் பனி
மாளிகை
காலைக் கதிரவனைக் கண்டால்
காலைந்து போகும்...!

**வி. முகுந்தன்**
முதலாமாண்டு – வேதியியல் துறை

## ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு

கை எடுத்து வணங்குகிறேன்
நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்
நான் வாழ! நான் முன்னேற!
எனக்காக உழைத்தவர்கள்
நான் இன்று இன்பம்காண
அன்று துன்பம் பொறுத்தவர்கள்
நான் முத்து சேர்க்க
மூச்சடக்கி முத்து குளித்தவர்கள்
என் இளம் வயதில் கண்ட
நடமாடும் தெய்வங்கள்!
என் ஆசிரியர்கள்.

**வெ.சாலினி,**
இரண்டாம் ஆண்டு நுண்ணுயிரியல்

## இளைஞர் எழுச்சி நாள்

விண்ணையும் மண்ணையும்
ஆயிந்தது போதுமென்று
காற்றோடு கலந்திட்ட
கடவுள் துகளே
இருபது தமிழரின்
ஈரம் காயாத ஆந்திரம்
கறை கண்ணீர்
சிந்துகிறது உமக்காய்
காவிரித்தாய் பிறக்கும் கர்நாடகம்
கால் கடுக்க நின்றது
நும் கால்களில் கண்ணீர் சிந்த
முல்லை யாரில் முறைந்த கேரளம்
நாளைய வளர்ச்சிக்கு வேண்டுவது
இந்த மறத்தமிழனின்
(அப்துல்கலாம்)
எம்பளம் (அடையாளம்)
தமிழகத் தலைவன் தாந்தானென்று
தத்தித் தாவும் காட்சிகளின்
தலையில் குட்டியது உலகம்
உலக தமிழனின்
உன்னதத் தலைவன்
ஒருவன் தான்யென்று
அதுவும் நீவிரென்று

**சே.விவிதா**
II B.SC MB

## வன்முறையற்ற நாள்

வன்முறை ஈட்டுவது
வெற்றியா? தோல்வியா?
வன்முறையின் பலன்
என்பது யாது?
தெரிந்தால் சொல்லுங்கள்.

வன்முறையில் ஈடுபட
காரணம் என்ன?
பணமா அல்லது
மறவரின் ரணமா?
அப்படித்தான் உள்ளது
ஒருவன்
வன்முறையில் விழுவது.

வன்முறையால் எல்லோருக்கும்
வெற்றியெனில்
இப்புவியில் அமைதியென்பதற்கு
இடம் ஏது?
ஏன் அமைதியால்
சாதித்த தலைவர்களை
இந்திய நாடு
பெற்றெடுக்கவில்லையா?

அமைதியை போதித்தவர்கள்
மறைந்ததோடு
அமைதியும் மறைந்ததா?
இல்லையெனில்
எதற்கு வன்முறை?

வன்முறை என்ற பெயரில்
உயிர்களைக் கொல்லும்
உரிமையை உமக்கு
அளித்தவர் யார்?

உயிர்களை கொன்றால்
நீ வீரனாவாயா?
அல்லது மற்றவரின்
சாபத்திற்கு ஆளாவாயா?

வன்முறையால் கிட்டுவது அழிவு
எத்தனையோ உதாரணங்கள்
நமக்கு முன், இருந்தாலும்
நாம் கண்டு கொள்ளவில்லையே

அன்றுவெள்ளையன் வேற்றுமையை
கண்டதனால் இந்திய
மக்களை அடிமையாக்கினான்.

வன்முறை நம்மிடத்தில் காட்டுவது
ஒற்றுமையா? வேற்றுமையா?
தெரிந்தால் சொல்லுங்கள்

வன்முறையால் விளைவது தீங்கு
அதற்கு வேண்டாம் நமது பங்கு
அதனை ஒழிக்க உன்கையை
ஓங்கு

வன்முறை சமுதாயத்தில்
படிந்துள்ள அழுக்கு
அதனை துடைப்பதே நமது இலக்கு
துடைக்கவில்லையெனில் அது

நமக்கு இழுக்கு

வன்முறையை கைவிடு

வளரும் தலைமுறையை வாளவிடு

சற்றே சிந்திப்போம்

அமைதியைச் சந்திப்போம்.

**பெ. சூரிய பிரகாஷ்**
**முதலாமாண்டு – வேதியியல்**

## உலக ஆசிரியர் தினம்

எழுத்தாணிப் பிடிக்க
விரலுக்குக் கற்றுத் தந்தாய்
எழுத்துக்கள் படிக்க
இதழுக்குக் கற்றுத் தந்தாய்
விடியலை ரசிக்க
இமைக்குக் கற்றுத் தந்தாய்
அன்பினை தந்தாயே என் அன்னை
அறிவினைத் தந்தார் என் ஆசிரியர்
அறியாமை இருள் நீக்கி
அறிவொளி நிரப்பும்
அழியாத ஆதவனே!
என் உயிர் ஆசான்களே
தெய்வங்களே
நன்றிப் பூக்களால் மாலையிட்டு
மகிழ்வேன்

**சு.சௌத்தரி,**
இரண்டாம் ஆண்டு நுண்ணுயிரியல்

## ஒரு தாயின் ஏக்கம்

வன விலங்கு
இயற்கையின் பசுமை நீ
வாழ்க்கையின் இனிமை நீ
இறைவன் படைத்த அதிசயம் நீ
உன் காட்டுக்குள் வந்தவர்களை
அன்போடு நடத்துவாய் நீ
அதே சமயத்தில் அவர்களை
வேட்டையாடுவாய் நீ
உன் வீட்டை அழிக்கும் போது
மனிதர்களை பொறுத்துக்
கொள்வாய் நீ
உன்போல் பொறுமை காப்பவர்
மனிதரல்ல.
ஆனால் மனிதரே உன் வீட்டை
அழிக்கிறார்கள்.

**இ.சந்தோஷ்குமார்**
**முதலாமாண்டு – பி.காம் சிஏ**

## வாட்டும் வறுமை

சமுதாயத்தை இரண்டாய்ப்
பிரிப்பவன்
உன்னுடன் இருப்பவருக்கு
துன்பம் தருவாய்..!
உன்னுடன் இல்லாதவர்க்கு
இன்பம் தருவாய்..!
தீய செயலுக்கு
அடியாய் உள்ளவன்
கடின வேலைக்கும்

சிக்கனத்திற்கும் எதிரி – நீ
குழந்தைத் தொழிலாளிகளை
உற்பத்திக்கு வித்திட்டவன் - நீ
இந்தியாவின் வளர்ச்சியை தடுப்பவன்
- நீ
நீ இல்லையென்றால் இந்தியா
வல்லரசு
நாடாக மாறும்...!
இவர் வேறு யாரும் இல்லை
நம்முடம் இருக்கும் 'வறுமை'...!

**வா. முனீஸ்குமார்**
**இரண்டாமாண்டு – நுண்ணுயிரியல் துறை**

## ஆசிரியர்களே...

மனிதனுள் மானுடம் பிறந்தநாள்
மாற்றம் நிச்சயம் என்றீர்
தேடுகிறோம் மனிதர்களை...
புயலென முயற்சி செய்தாள்
விளைவென வென்றிடுவாய் என்றீர்
செய்கின்றோம் முயற்சிகளை..
வியர்வையதனை நீ சிந்தினால்
விதையாக அதுமாறும் என்றீர்
சிந்துகின்றோம் வியர்வைதனை...
விதையொன்றை நீ விதைத்தால்
மரமாக காண்பாய் என்றீர்
விதைக்கின்றோம் விதையதனை...
விழித்திருந்து எழுச்சி செய்தாள்
செழிப்பதனை உணர்வாய் என்றீர்
விழித்திருப்போம் விடியும் வரை ...
தோள் கொடுக்க
தோழமையிருந்தாள்
நாடே பரஸ்பரம் என்றீர்
நேசிக்கின்றோம் தோழமையை...
இவற்றை உணர்த்திய நீவீர்.. நீவீர்
உணர்த்தினீரே ஒன்றனை..
மாதா பிதா குரு தெய்வம்
அட! அல்ல மானிடனே
மாதா பிதா குருவே தெய்வம்...

**அ.ரம்யா,**
இரண்டாம் ஆண்டு நுண்ணுயிரியல்

## உலக வன நாள்

உலகில் வனங்களும் ஓர் அங்கம்
உயிரினங்கள் பலவற்றின் புகழிடமாம்
உயர்ந்த தருக்களின் வசிப்பிடமாம்
உயிர்வழி நிறைந்தது கானகமாம்!

புறவு பொதும்பு குறுங்காடாம்
அடவி என்பது என்பதும் வனம்கானம்
அமைதியும் இருளும் குடிகொள்ளும்
அச்சமளிக்கும் அடர்ந்தவனம்!

வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்தும்
மண்ணின் அரிப்பை அது தடுக்கும்
விலங்கினம் பலவற்றின் இருப்பிடமாம்
மூலிகை வளமும் அதிலடங்குமாம்!

வன வளம் காப்பது நம்கடமை
வனத்தை அழிப்பது மிகமடமை

கானகம் என்பது பொதுவுடமை
அழித்தால் குறையும் மழவளமை...!!

வனங்கள் இல்லேல் வளங்கள் ஏது?
வானம் பெய்யுமா மழையமுதம் கூறு?
நாட்டுக்கு வனங்கள் எல்லாம்
தனங்கள்
நாமறிந்து காத்த மாறட்டும் மனங்கள்!
வனங்கள் நிறைந்த நாடே நன்னாடு!
வனத்தை அழித்தால் நாடும்
சுடுகாடே!
உலக வனநாள் இன்று
உயரும் சிந்தனை நன்று!
செயலில் ஆக்கம் காண
செம்மையாய் உழைப்போம் வாழ!
இடம்பொருள் ஏவலென
கவி படைக்கும் தாயே! வாழ்த்துக்கள்
அருமை.

**மு. உதயகுமார்**
**முதலாமாண்டு – வேதியியல்**

## நட்பு

உற்றது உதவுவது நட்பு
மலரினும் மெல்லியது நட்பு
பழகி வருவது நட்பல்ல
பண்பால் அமைவது நட்பு...

**செ.வினோத்குமார்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## என் ஆசிரியர்

மாதா பிதா குரு தெய்வம்
முன்னோர்களின்
பழமொழி
குருவை மாதாவாக பிதாவாக
தெய்வமாக நினைப்பவன்
முன்னேறுபவனின் மொழி
தெரியாதது மட்டுமல்ல
தெரிந்ததும் இவர் சொல்லித்தான்
தெரிகிறது நமக்கு
அடுத்த தலைமுறையைப்
பிரசாகமாகக் காட்டும் இன்றைய
தலைக் கண்ணாடி
நம்மை பற்றி நமக்குத் தெரிய
இவர் தான் காரணம்
இவர்களால் தான் ஆனது
வாழ்க்கை அழகான தோரணம்
ஆயிரம் புத்தகம் படித்த
பின்பும், புத்தகம் போல்
அமைதியான நூலகம் - ஆசிரியர்
நல்ல தோடினாய் சொல்லிக்
கொடுப்பதில்
நல்ல பணியாளனாய்
தன்னை மாற்றிக் கொள்வார்
எளிமையில் எப்போதும்
பிரம்மாண்டமானவர் - இவர்
நின்று கொண்டே நமக்கு
பாடம் நடத்தியதால் தான்
என்றென்றும் நம் மனதில்
நின்று கொண்டு இருக்கிறார்.

**செல்வகணபதி.க.**
முதலாம் ஆண்டு இளங்கலை வேதியல்,

# சிறுகதை

## இளமாறன்

இளமாறன் என்பவன் நடுத்தர குடும்பத்தில் வாழக்கூடியவன். அவன் தந்தை கூழித் தொழிலாளி. அவன் தாய் காட்டு வேலைக்கு செல்பவல். அவன் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன். அவனுக்கு படிப்பில் அதிகமாய் ஆர்வம் இல்லாமல் சுற்றிக்கொண்டு இருந்தான். அவன் வகுப்பில் படிக்கும் மாணவி ரேவதி. அவள் இளமாறனுக்கு நெருங்கிய தோழி. அவள் இளமாறன் மீது மிகுந்த அக்கறை கொண்டவள். அவ்வருடம் அவர்களுக்கு பொது தேர்வினை எழுதகூடிய வருடம். இளமாறனின் வகுப்பு ஆசிரியர்கள் அவனை திட்டிக் கொண்டே வந்தனர். அவன் அதை கண்டு கொள்ளாமல் இருந்தான். ரேவதி தன் நேரத்தை இளமாறனோடு களித்து அவனுக்கு நல்லுரைகளை புகட்டியும் வீட்டுபாடங்களை முடிக்கவும் உதவியாய் இருந்தாள். அவனும் ரேவதியின் சொல்பேச்சினைக் கேட்டு கொஞ்சம் கொஞ்சமாக மாறி படிப்பில் கவனத்தை செலுத்தினான். பின்னர்பின்னர் படிப்பில் சிறந்து அப்பள்ளிக்கு பள்ளியின் தலைவராய் பொறுப்பேற்றான். அனைத்து ஆசிரியர்களும் அவனை பெருமை பாராட்டினார்கள். அவர்களுக்கு இறுதியில் பொது தேர்வு வந்தது. இளமாறன் ரேவதியின் உதவியால் தேர்வில் அப்பள்ளியின் முதல் மாணவனாய் தேர்ச்சி பெற்றான். ரேவதியும் மகிழ்ச்சியடைந்தாள் ரேவதியின் முயற்சியால், இளமாறனும் வெற்றி பெற்றான்.

ம. இந்துமதி, 2nd BT–A

## கருணை

கண்ணன் ஒரு கணிணி மென்பொறியாளர் அவரது மனைவி

அமுதா இவர்களுக்கு அருண் என்ற ஐந்து வயது மகன் இருக்கிறான் கண்ணனுக்கு நல்ல சம்பளம் என்பதால் அவர்கள் ஒரு சொந்த வீடு வாங்கி வாழ்ந்து வந்தார்.

அன்று அருணுக்கு பிறந்தநாள் எனவே மூவரும் அருகிலுள்ள முருகன் கோவிலுக்குச் சென்றனர். மகன் பெயரில் அர்ச்சனை செய்தனர். அதற்காக அவர் 200 ரூபாய் அருண் கையால் போடச் செய்தார். பிறகு அவர்கள் கோயிலை விட்டு வெளியே வருகையில் நிறைய பிச்சைக்கார்ர்கள் பிச்சை கேட்டபடி இருந்தனர். அதில் சிலர் ஊனமுற்றவர்களும் இருந்தனர்.

ஆனால் கண்ணன் யாரையும் மதிக்காமல் வேகமாக வந்தார். உங்களுக்கெல்லாம் வேலையே இல்லையா? என்று திட்டியபடியே வந்தார். அதன்பிறகு மூவரும் சாப்பிடுவதர்கு அருகிலுள்ள நல்ல உயர் ரக உணவு விடுதிக்குச் சென்றனர். விதவிதமான உணவுகளை வாங்கி உண்டனர். ஆக மொத்தம் அவர்கள் சாப்பிட்டது 1800 ரூபாய் உணவு பரிமாறுபவர் வந்து சாப்பிட்ட்தற்கான ரசீதை ஒரு அழகான அட்டைக்குள் வைத்து கையில் கொடுத்தார். கண்ணன் 1800 ரூபாய் வைத்தார் அந்த வேலையாள் அதை கனக்கரிடம் கொடுத்து காசு கட்டியதற்கான ரசீதுடன் அந்த அட்டையை இவர்கள் சாப்பிட்ட மேசையில் வைத்தார். கண்ணன் எதுவும் சொல்லாமல் ஐந்து 10 ரூபாய் நோட்டுகளை அதற்குள் வைத்தார். அந்த கணம், அருண் அதை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியே ஓடினான். அங்கே இருந்த ஊனமுற்ற பிச்சிக்காரர்கள் தட்டில் போட்டான். அவர்கள் முகத்தில் பெருமகிழ்ச்சியுடன் கருணை மனமாற வாழ்த்தினார். அதனை பின்தொடர்ந்து வந்த கண்ணன் கோபத்துடன் அவனை பிடித்து என்ன பண்ற நீ என்று கேட்டார் அதற்கு அவன் அறியாமையில் சொன்னான் அப்பா பிச்சைக்காரங்க வெளியில தான இருக்காங்க அப்புறம் உள்ளே எதுக்கு காசு வெச்சீங்க அவனது பேச்சு கண்ணனுக்கு சாட்டையடியாய் இருந்த்து. தான் மனதில் இன்னும் பிச்சைக்காரனாய்

தான் இருக்கிறோம் என்று எண்ணி வருந்தினான். மனமாற்றத்துடன் மகனை அழைத்துக் கொண்டு கிளம்பினான் ஆதரவற்றோர் இல்லத்துக்கு.

**தே. மௌனிகா,** 11 B.SC. (BT) A

# கட்டுரை

## டிஜிட்டல் மொழி

2015 செப்டம்பர் 10 முதல் 12 வரை போபாலில் நடந்த உலக இந்தி மாநாடு இந்தி பேசும் மக்களையும், இந்தி ஆதரவாளர்களையும் உற்சாகமடையச் செய்திருக்கிறது. 39 நாடுகளிலிருந்து வந்திருந்த இந்தி அறிஞர்கள், ஆய்வாளர்கள் முன்னிலையில் மாநாட்டின் தொடக்கமாக பிரதமர் மோடி ஆற்றிய உரையில், "எதிர்காலத்தில் ஆங்கிலம், சீனம் ஆகிய மொழிகளோடு இந்தியும் டிஜிட்டல் உலகில் ஆதிக்கம் செலுத்தும்" என்று கூறியது தான் அதற்குக் காரணம். இந்தியை நாட்டின் ஆட்சிமொழியாக்க சட்ட ரீதியாகவும்,சுய பரப்புரைகளாலும் பா.ஜ.க. மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்று, மோடியின் அக்கருத்தை புறம்தள்ளிவிட முடியாது. மோடியின் இந்திச்சார்பு உலகறிந்ததாக இருந்தாலும், இந்தி மாநாட்டில் அவர் கூறிய இந்தக் கருத்திற்கு சில யதார்த்த உண்மைகளும் அடிப்படை ஆதாரங்களாக இருக்கின்றன. அவற்றுள் மூன்று உண்மைகள் முக்கியமானவை.

முதல் உண்மை, இணையத்தைப் பயன்படுத்தும் இந்தியர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் அபரிமிதமான வளர்ச்சி. இணையப் பயன்பாட்டில் சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் போட்டியாக இந்தியா திகழ்கிறது. சீனா 650 மில்லியன் (43% பேர்), அமெரிக்கா 279 மில்லியன் (47% பேர்) இணையப் பயன்பாட்டளர்களைக் கொண்டுள்ளன. இந்தியா 305 மில்லியன் (24% பேர்) இணையப் பயன்பாட்டாளரோடு சீனாவிற்கு அடுத்த

நிலையில் உள்ளது. இணையத்தைப் பயன்படுத்தும் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக இந்திய மொழிகளில் இணையத்தை பயன்படுத்தும் திட்டத்தை (Indian Language Internet Alliance) கூகுள் தொடங்கியிருக்கிறது. இதன் மூலம் இந்திய இணையப்பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கையை 2017 ஆம் ஆண்டுக்குள் 500 மில்லியனுக்கு உயர்த்த கூகுள் இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் பயனாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு இந்தி ஆப்ஸ்களைத் தான் கூகுள் முதலில் உருவாக்குகிறது.

இரண்டாவது உண்மை, உலகில் அதிகமான மக்கள் பேசும் மொழிகளில் மாண்டரின் (சீனம்), ஆங்கிலத்தை அடுத்து இந்தி (497 மில்லியன் மக்கள்) மூன்றாவது இடத்தை வகிப்பதாக சமீபத்தில் வந்த சர்வே (http://www.worldblaze.in/top-10-most-spoken-languages-in-the-world/).

மூன்றாவது உண்மை, இந்தி மொழியை உலக அளவில் அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கும் இந்தித் திரைப்படங்கள்.

உலகின் பல பகுதிகளில் பரவியிருக்கும் இந்தியர்களுக்கும், இந்தியாவில் வசிக்கும் இந்தியர்களுக்கும் (அவர்கள் இந்தி அல்லாத பிறிதொரு இந்திய மொழியை தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும்) இந்தித்திரைப்படங்கள் மீது ஏற்பட்டிருக்கும் கவர்ச்சி. இது தற்போதைய இந்திய சினிமாவின் அடையாளமாக இந்தித்திரைப்படங்களை இந்தியர்களிடமே முன்னிறுத்திக் கொண்டிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐரோப்பாவும் அமெரிக்காவும் உலக நாடுகளின் மொழி,கலாச்சாரம் முதலியவற்றில் ஆர்வம் செலுத்தத் தொடங்கின. அதன் விளைவாக தம் நாட்டு பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு நிறுவனங்களிலும் தனித்தனி ஆய்வு மையங்களை நிறுவின. இது இன்று உலகம் முழுவதும் பரவலாகியிருக்கிறது. அமெரிக்கா,ஐரோப்பா,மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் தெற்காசிய ஆய்வுகள் மையம் (Centre of South Asian Studies), இந்தியவியல் ஆய்வு நிறுவனம் (Institute of Indology) என ஆய்வு மையங்களை நிறுவி இந்திய சமூக, பண்பாடு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கிய பின், ஒரு

சமூகத்தைப் பிரதிபலிக்கும் அடிப்படை ஆதாரங்களில் வரலாறு,இலக்கியம் முதலியவற்றோடு இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய செல்வாக்குமிக்க காட்சி ஊடகமான சினிமாவும் முக்கிய இடம் பிடித்தது. மொழி, பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றில் இந்தியர்கள் வேறுபட்டிருந்தாலும், ஒட்டுமொத்த இந்திய சமூகத்தின் பிரதிநிதியாக இந்தி சினிமாவையே உலகம் அணுகுகிறது. இது போன்ற காரணிகளும் இந்தி மொழியை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன.

இம்மூன்றும் மோடி, சுஸ்மாசுவராஜ், பா.ஜ.க., ஆர்,எஸ்.எஸ், சங்பரிவார் போன்ற இந்தி ஆதரவாளர்களை உற்சாகமடையச் செய்திருக்கின்றன.

இதற்கு முன்பு நடந்த ஒன்பது உலக இந்தி மாநாடுகளும், உலகத்தமிழ் மாநாடுகள் போல் இலக்கியம், மொழி அமைப்பு குறித்தே விவாதிப்பதாகக் கழிந்திருக்கின்றன.மோடியின் ஆட்சியில் நடந்த இந்த பத்தாவது உலக இந்தி மாநாடு தான் மொழி அரசியலை கையிலெடுத்து இந்தியைக் கொண்டாடும் மாநாடாக முடிந்தது. மத்திய அரசின் ஆதரவோடு இந்த மாநாட்டை அமர்க்களப்படுத்தியவர் வெளியுறவுத்துறை அமைச்சரும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவருமான சுஸ்மா சுவராஜ்.

**த. சுந்தரராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

## வறுமை

❖ உலக வருமை ஒழிப்பு நாள் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 17-ஆம் தேதி சர்வதேச ரீதியில் கடைபிடிக்கப்படுகிறது. உலக வக்கியின் தரவுகளின் படி 1.4 பில்லியன் மக்கள் மிகவும் வறுமைக் கோட்டின் மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்றனர்.

❖ இவர்களின் நாள் வருமானம் 1.25 டாலர் ஆகும். சர்வதேச ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வறுமை காரணமாக மரணமடைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும்

விதமாகவும், பசிக் கொடுமையில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை 1992 ஆம் ஆண்டு வறுமை ஒழிப்பு தினத்தை உத்தியோகப் பூர்வமாக அறிவித்தது.

❖"வறுமைக்கு எதிரான குழந்தைக்கு மற்றும் குடும்பங்களின் வேண்டுகோள்" 2009 – ஆம் ஆண்டின் சர்வதேச வறுமை ஒழிப்பு நாளின் தலைப்பாகும்.

❖இந்நாள் முதன் முதலாக 1987-ஆம் ஆண்டு பிரான்சின் பாரிஸ் நகரில் கடைபிடிக்கப்பட்டது. பசி, வறுமை, வன்முறை, பயம் என்பவற்றில் பலியானோரைக் கௌரவிக்கும் வகையில் சுமார் பத்தாயிரம் மக்கள் 'டொர்கேட்ரோ' வின் மனித உரிமைகள் மற்றும் விடுதலைச் சதுக்கத்தில் ஒன்று கூடினர். இவர்கள் உலகளாவிய ரீதியில் வறுமை நிலை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தனர்.

❖வருமை நிலை காரணமாக உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதுதன் அவசியம் குறித்து அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டின் அல்லது இடத்தின் அடிப்படை வாழ்க்கைத் தரத்துக்குக் கீழ் வாழும் மக்களை ஏழ்மை நிலையில் அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என வரைவிலக்கணம்ப்படுத்தலாம். பொதுவாக ஒரு குறிப்பிட்ட அளவு வருமானத்தை வைத்தே வறுமை நிலை அளவு சார்ந்து மதிப்பிடப்படுகிறது. தீவிர வறுமை நிலை என்பது நாலொன்றுக்கு 1.25 டாலர்களுக்கும் குறைவான தொகையில் ஒருவர் வாழ்க்கை நடத்துவது என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

❖இது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். பொதுவாக வறுமை நிலை உனவு, சுத்தமான நீர், உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், சமூக வாய்ப்புகள், மனித அரசியல் உரிமைகள், பிற சமூகங்களுடன் தொடர்புகளற்ற அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலையைக் குறிக்கின்றது.

❖உலகளாவிய ரீதியில் வறுமை சடுதியாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வாஷிங்டனில் நடைபெற்ற நிதி மற்றும் வளர்ச்சித்

துறை மாநாட்டில்(2009) எச்சரிக்கப்பட்டுள்ளது. இதனால் மேலும் பல நாடுகள் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள அதே வேளை, வறிய நாடுகளுக்கான உதவிகளைச் செல்வந்த நாடுகள் தொடர்ந்தும் வழங்க வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

❖உலக வங்கியின் 185 உறுப்பு நாடுகளினதும் அமைச்சர்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் கலந்து கொண்ட நிதி மற்றும் வளர்ச்சித் துறை மாநாட்டில் நிதி நெருக்கடி நீண்ட காலத்திற்கு நீடிக்கும் பட்சத்தில் உலக வங்கிக்கான வளங்களை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖2015- ஆம் ஆண்டுக்குள் வருமையை ஒழிப்பதற்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐ.நா. வின் இலக்குகளை இந்நிதி நெருக்கடி தடம்புரளச் செய்து விடுமெனவும் இதில் கலந்துகொண்ட அமைச்சர்கள் எச்சரிக்கை விடுத்தமை இங்கு அவதானிக்கத்தக்க செய்தியாகும்.

❖மனிதப் பேரழிவைத் தடுப்பதற்கு நாம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ள உலக வங்கியின் தலைவர்(2009) றொபேர்ட் ஷோலிக் ஐ.நா. வின் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளான வறுமை, பட்டினி, கல்வி, சமத்துவம், தொற்றுநோய் மற்றும் சிசு மரணம் போன்றவற்றில் பெரும்பாலனவை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

❖மேலும் பொருளாதார நெருக்கடியால் வறுமையில் வாடும் நாடுகள் தான், ஐயகோ! செல்வத்தை ஏற்றுமதி செய்கின்றன.

❖வருமையும் செல்வ நிறைவும் மனித சமுதாயத்துடன் உடன் பிறந்தவை. பணரும், விறலியும் கொடைவள்ளல்களிடமிருந்து பரிசில்கள் பெருவதை, அதுவும் அமோகமாகப் பெறுவதை பதிற்றுப்பத்து போன்ற சங்க இலக்கியங்களில் காண்கிறோம். ‘கடும்பசியாலும், தாகம் தனித்து உண்ணாது கரகரவென கரைந்து சுற்றம் கூட்டும்…’ எனப்படும் மரபுக்கிணங்க, ஏழை ஏழைக்கு உதவ விழையும் யதார்த்தத்தையும்,

மனித சமுதாயத்துடன் உடன் பிறந்ததாக கண்கிறோம். இயல்மொழி வாழ்த்துறையில் ஒழுகு வண்ணத்தில் கூந்தல் விறலியர் என்ற செந்தூக்கு பாடல் ஒன்றை படியுங்கள். படித்தாலே பசி தீரும்! அப்படியெல்லாம் பேசித்தான் இதுவரை ஏழைகளை ஏமாற்றி வந்தோம்.

"உண்மின் கள்ளே! அடுமின் சோறே!
எறிக திற்றி! ஏற்றுமின் புழுக்கே!
வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிப்ப,
இருள் வணர் ஒலிவரும் புரி அவிழ் ஐம்பல்
ஏந்து கோட்டு அல்குல், முகிழ் நகை, மடவரல்,
கூந்தல் விறலியர்! வழங்குக அடுப்பே!
பெற்றது உதவுமின்; தப்பு இன்று பின்னும்
மன் உயிர் அழிய, யாண்டு பல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவு எதிர்கொண்ட
தன் இயல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே!

❖ தமிழனுக்கே உரித்தான இந்தப் பழமை மரபு பின்னணியில் 1987 - இல் பிரான்சின் பாரிஸ் நகரத்தில் 'ஊருக்கிளைத்த பிள்ளையார் கோயிலாண்டிகளை' பொருமைப்படுத்தும் விழாவில் நூறாயிரம் மக்கள் கூடியதையும், 1992 லிருந்து அக்டோபர் 17 ஆவது தினம் உலக வறுமை ஒழிப்புநாள் ஒவ்வொராண்டும் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுவதையும், கூர்ந்து கவனித்தால் புலப்படும் உண்மைகள்:

- மனிதனின் வாழ்க்கை வறுமையில் தான் தொடங்கியது
- பஞ்சமும், பற்றாக் குறையும், வியாதிகளும், கணக்கற்ற உபாதைகளும் அதை அதிகரித்தன.
- குடிநீர், சத்துள்ள உணவு, தலைமேல் கூரை, சுத்தமான சூழல் போன்ற அத்தியாவசியங்கள் ஏழைகளின் உரிமையாக உதட்டளவில் மட்டுமே பேசப்படுகிறது.
- வறுமையினால் அநேகர் அற்ப ஆயுளில் மறைந்து போகின்றனர்.

➢வறுமையை ஒழிக்க இயலாது

➢அதை கணிசமாகத் தணிக்க இயலும்

➢அதற்கு உலக அளவில் கொடையுள்ளம், நிர்வாகம், தன்னார்வம் எல்லாவற்றையும் ஒன்றாகத் திரட்ட வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்து.

**க. ஜனனி**
**முதலாமாண்டு – வேதியியல் துறை**

## திருக்குறளில் வானவியல் பற்றிய செய்திகள் - சந்திரன்

சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையே பூமி இயங்கும் போது சந்திரனில் படியும் பூமி நிழல் சந்திரக் கிரகணம் என்று சொல்வர். சந்திரன் பூமியைச் சுற்றிவரும் தளத்திற்கும் பூமி சந்திரனை சுற்றிவரும் தளத்திற்கும் இடையே 5 பாகை சாய்மானம் இருக்கிறது என்பர். பூமி சுற்றியவாறே அதனுடன் சேர்ந்தே சூரியனைச் சுற்றி வட்டமடிக்கும் சந்திரன் ஒவ்வொரு பௌர்ணமியின் போதும் முழு நிலவாக காட்சியளிக்கும். இரண்டு பௌர்ணமியின் போதும் முழு நிலவாக காட்சியளிக்கும். இரண்டு பௌர்ணமிகளுக்கு இடையே 29.531 நாட்கள் இடைவெளி இருக்கும். இதனையே ஆங்கிலத்தில் சைனோடிக் மாதம் என்றும், தமிழில் திங்கள் மாதம் என்றும் கூறுவர். சைனோடிக் என்றால் சந்திப்பு என்றேபொருள் ஆகையால் அக்காலகட்டத்தில் வள்ளுவனார் இதைப் பற்றிய செய்திகளை தம் குறல்களின் மூலம் தெரிவித்திருக்கிறார். அதன் சான்றாக, நிலாப் பிறைகளும் வள்ளுவத்தில் உண்டு என்பர். பிறைமதி (குறள் 782) பற்றிய குறிப்பு உள்ளது. சந்திரனின் தோற்றம் பற்றிய இலக்கிய செய்தியும் ஆராயலாம். மதிக்கண் மறு (குறள் 957).

**மணிகண்டன்**
**இளங்கலை தமிழ் இரண்டாம் ஆண்டு**

# முதியோர் கல்வி

ஒரு முழுமையான வாழ்க்கை வாழ வேண்டும் எனில் நிச்சயம் கல்வியறிவு அவசியம். கல்வி இல்லாத மனிதன் வாழுகிற வாழ்வு குருடன் யானையைப் பார்ப்பது போன்றதுதான் கிராமங்களில் பல சூழ்நிலை காரணமாய் கல்வியறிவில்லாத முதியோர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வி போதிப்பது, படித்த ஒவ்வொரு மனிதனின் தார்மீகக் கடமை முதியோர் கல்வி பற்றி இக்கடுரையில் காண்போம்.

முதியோர் கல்வி:

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்த நாட்டின் செல்வத்தை மட்டும் பொறுத்து அமைவதல்ல. கல்வி முக்கியப் பங்கு வகுக்கிறது. அதிலும் கிராமப்புற மக்களின் முதியோர்களின் ஏழை விவசாயி கூலித்தொழிலாளியின் அறியாமை போக்கப்பட்டு அறிவுக் கண் திறக்கப்படவேண்டும். அப்போது தான் மூட நம்பிக்கையை அகற்ற முடியும் உண்மையான வளர்ச்சியை எட்ட முடியும்.

அந்த வகையில் நம் நாட்டிலுள்ள கிராமங்களில் இன்றும் ஏராளமான ஆண், பெண், முதியோர், அடிப்படைக் கல்வியறிவு கூட இல்லாமல் வாழ்ந்து வருவது வேதனைக்குரியது. இந்தக் குறையைத் தீர்க்க வந்தது தான் முதியோர் கல்வித் திட்டம்.

முதியோர் கல்வியின் செயல்பாடு

கிராமப்புறத்திலுள்ள முதியோர்கள், தொழிலாளர்கள் அனைவரும் தங்கள் அன்றாட பணிகளை முடித்து விட்டு வருவார்கள். ஊரின் ஒரு பொதுவான இடத்தில் கூடுவார்கள். படித்த இளைஞர்கள், ஆசிரியர்கள், தொண்டு அமைப்புகளின் துணையோடு கல்வி கற்பிக்கப்படுகிறது. மாலை இரவு நேரங்களில் சில மணித்துளிகள் அடிப்படைக் கல்வியறிவு

வழங்கப்படுகிறது. மத்திய மாநில அரசின் கூட்டுத் திட்டத்தில் இது நடைபெறுகிறது.

படிக்காததன் தீமைகளை அவர்கள் புரிந்து கொள்ளுமாறு விளக்கப்படுகிறது. அவர்களுக்கு போதிய கல்வியறிவு போதிக்கப்படுகிறது. மிக எளிய முறையில் அமைந்த பாட்த்திட்டத்தின் படி நடத்தப்படுகிறது. சொற்பொழிவுகள் வாயிலாகவும், பயிற்றுவிக்கப்படுகிறது. மிக எளிய முறையில் எழுதப்பட்ட கண்கவர் வனப்புள்ள சிறந்த கதைப்புத்தகங்கள், செய்தித்தாள்களை படித்து, நாட்டு நடப்பை அறிந்து கொள்ளவும் எளிய கணக்குகள் புரிந்து கொள்ள முடிகிறது. சொல்லித் தரப்படுகிறது.

**மு.நவநீதன்**

**முதலாம் ஆண்டு இளங்கலை வேதியியல்**

## உலக ஆசிரியர் தினம்

அக்டோபர் 5-ம் தேதி உலக ஆசிரியர் தினம் என்று யுனெஸ்கோவால் பரிந்துரைக்கப்பட்டது. பொதுவாக ஆசியக் கண்டத்தில் ஆசிரியர்களுக்கு மரியாதையும், மதிப்பும் கொடுப்பார்கள். ஏனெனில் அவர்கள்

மாதா, பிதா, குரு, தெய்வம்

தெய்வங்களுக்கும், தாய், தந்தை, குரு (ஆசிரியர்கள்) ஒப்பானவர்கள்.

ஆசிரியர்கள் உயர்ந்தவர்கள். ஆசிரியர்கள் என்றும் உயர்ந்தவர்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாணவ்ன தனது பள்ளி விழாவில் கலந்து கொண்டான். அப்போது தலைமையாசிரியர் வந்தபோது அனைவரும் எழுந்தனர். அப்போது அவன் நினைத்துக் கொண்டான். இவர் தான் பெரியவர் என்று பிறகு மாவட்ட கல்வி அதிகாரி வந்த பிறகு தலைமையாசிரியரும் எழுந்து நின்றார். பிறகு அவன் மனதில் குழப்பம் தோன்றியது. “யார் தான் பெரியவர்? என்று பிறகு முதலமைச்சர் வந்தார். தலைமையாசிரியருடன் மாவட்ட கல்வியதிகாரியும் எழுந்தார். மறுபடியும் குழப்பம் தோன்றியது. பிறகு விழா முடிவடைந்தது. முதலமைச்சர் வேகமாக ஓடிச் சென்று ஒரு குடிசையில் இருந்த முதியவரிடம்,

ஐயா நான் உங்களிடம் படித்த மாணவன்'' என்றார். என்றும் உங்களுக்கு மாணவன் என்று தலை வணங்கி நின்றார்.

அப்போது அந்த மாணவனுக்கு தெரிந்தது. ஆசிரியர் தான் பெரியவர் என்று அவன் புரிந்து கொண்டான்.

ஆகவே, ஆசிரியரை மதித்து அவர்கள் கூறுகின்ற வழியில் நின்றால் உங்கள் வாழ்க்கை உயரம் மேலும் மேலும் கூடும்

**ல.ர.விக்னேஷ்,** முதலாண்டு பி.காம் சி.ஏ.

# ஆதரவற்றோர்

அனாதைக் குழந்தைகளையும் ஆதரவற்ற முதியோர்களையும் அரவனைத்துப் பாதுகாப்பதற்கென்றே உலகில் அவதரித்த அன்னையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்

*அன்னை தெரசா சொன்ன வாசகம்*

*ஆதரவற்ற குழந்தைகளை எப்பொழுதும் பாதுகாத்தல் வேண்டும்.*

*ஆதரவற்ற குழந்தைகளை எப்பொழுதும் இழிவாக்கக் கருதக் கூடாது*

*அதே போன்று முதியோர்களையும் பாதுகாக்க வேண்டும்.*

*முதியோர்களையும், ஆதரவற்ற குழந்தைகளையும் அரவணைப்பதே மிகவும் நற்குணமாகக் கருதப்படுகிறது.*

*கடவுளின் பணி*

*அனாதைக் குழந்தைகளுக்கும் ஆதரவற்ற முதியோர்களுக்கும் தூய உள்ளத்தோடு தொண்டு செய்வதே எனக் குறிப்பிட்டார் அன்னை. அந்தக் கடவுளின் பணியை இரு கரம் நீட்டி வரவேற்று உபசரிக்க்க் காத்திருக்கிற கட்டளையை வசூலிக்கும் முதியோர் இல்லங்கள்.*

*எத்தனை எண்ணங்கள் .....சோகங்கள்*

*சென்னை மயிலாப்பூர் அன்னை இல்லத்தில் புகலிடம் தேடியுள்ள 78 வயது பெண்மணி ரங்கநாயகி சொல்கிறார். எனக்கு ஒரே மகன். கணவர்*

*இறந்ததற்கு பிறகு நல்லா படிக்க வைத்த இஞ்ஜினியர் ஆக்கினேன் கல்யாணம் செய்து வைத்தேன் மனைவி வந்த பிறகு அவன் மாறிட்டான்.. மனைவி பேச்சை கேட்டு என்னை விரட்டிவிட்டான் என்று கண்ணீர் மல்க கூறினார்.*

*அன்னை பாத்திமா*

*அன்னை பாத்திமா ஆதரவற்றக் குழந்தைகள் நலம் ஒன்றையும் நாங்கள் நட்த்துகிறோம் 250 குழந்தைகள் அங்கே உள்ளனர்.*

*முதியோர் இல்லங்கள்*

*ஓரம் கட்ட உதவும் ஓரிடமாகவே முதியோர் இல்லங்களை பார்க்கிறார்கள்.இப்பொழுது மூலைமுடுக்கெல்லாம் முதியோர் இல்லங்கள் அனாதை மையங்கள்.... அன்புக்காக ஏங்கும் பிஞ்சுகளும் பெரியவர்களும் கடவுள் உள்ளமே கருனை இல்லமே என்று பாடாத குறை...*

**அ.தமிழ்செல்வி**

**இளங்கலை முதலாம் ஆண்டு வணிகவியல் பி.காம் சி.ஏ—சி**

## ஆசிரியர்

சேலம் மாவட்டத்தில் சங்ககிரி என்ற ஊரில் மகே' என்ற மாணவனும் ராஜா என்ற மாணவனும் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12-ம் வகுப்பு படித்து வந்தனா். இவா்கள் இருவரும் நல்ல நண்பா்கள். அக்டோபா் 5-ம் தேதி உலக ஆசிரியா் தினம் வந்தது. அன்றைய தினம் ராஜா மற்றும் அனைத்து மாணவா்களும் ஆசிரியா்களுக்கு ஆசிரியா் தின வாழ்த்துக்களைத் தெரிவித்தனா். மகே' மட்டும் தெரிவிக்கவில்லை. அதற்கு ராஜா அவனைப் பாா்த்து நீ ஏன் ஆசிரியா்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கவில்லை என்று கேட்டான். அதற்கு மகே' அவா் என்னை எப்பொழுதும் திட்டிக் கொண்டிருக்கிறாா். அதனால், நான் அவா்க்கு ஆசிரியா் தின வாழ்த்து கூறமாட்டேன் என்றான். உடனே ராஜா அவா்கள் நாம் படிக்கவில்லையென்றும், படித்து முன்னேற வேண்டும் என்றுதான்

திட்டுகிறார்கள். அவர்கள் எது செய்தாலும், சொன்னாலும் அது நம்முடைய நன்மைக்காகத்தான் இருக்கும். நான் இப்பொழுது உதாரணம் கூறுகிறேன் கேள். நான் ஆசிரியர் சொல்லைக் கேட்டு முன்னேறி வருகிறேன். நீ அவரை மதிக்காமல் முன்னேறாமல் இருப்பாய்! பிறகு 3 வருடங்கள் கழித்து நீயும் நானும் ஒரு நாள் சந்திப்போம். அப்பொழுது தான் சிந்திப்பாய்! நானும் ஆசிரியர் சொல்லைக் கேட்டு நன்றாகப் படித்து இருந்தால் முன்னேறியிருக்கலாம் என்று நண்பனின் அறிவுரையைக் கேட்ட மகே' மனம் திருந்தி ஆசிரியரை மதிக்கக் கற்றுக் கொள்கிறான். ஆசிரியர் தின வாழ்த்தும் ஆசிரியர்க்கு தெரிவிக்கிறான். இவ்விரு நண்பர்களைப் போல் ஆசிரியரை மதித்து அவர்கள் சொல்லைக் கேட்டும் வாழ்வில் முன்னேற்றம் அடையுங்கள். எல்லோருக்கும் ஆசிரியர் தின வாழ்த்துக்கள்.

**ப.நந்தகுமார்,** இரண்டாமாண்டு நுண்ணுயிரியல்

## மனவளர்ச்சி குன்றியோர்

மனவளர்ச்சிக் குறை இன்றுவரை எல்லோருக்கும் ஒரு சவாலாக இருந்து வருகிறது. ஒரு மனிதனுக்குத் தன் உடலிலோ அல்லது உணர்வு உறுப்புகளிலோ ஊனம் ஏற்பட்டால் அவனால் தன் ஊனத்தைப் பொருட்படுத்தாமல் முன்னேற இயலும் அதற்கு உதவுவது மூளையும் அதன் செயல்பாடுகளும் ஆனால் ஒருவனுடைய ஊனம் அவனுடைய மூளையில் ஏற்படுமாயின் எதிர்காலம் ஒரு கேள்விக்குறிதான். நிகழ்காலத்தைக் கூட பிரச்சனையோடு தான் கழிக்க வேண்டிய சூழ்நிலை.மற்ற ஊனமுற்றவர்களுக்கு இருப்பதைப் போன்ற சில மாற்று ஏற்பாடுகளும் அதாவது காது கேளாதவர்களுக்குக் காது கேட்கும் கருவி, பார்வையற்றவர்கலுக்கு மின்னனு வழிகாட்டி கால் ஊனமுற்றவர்களுக்குச் சக்கர நாற்காலி போன்ற உதவிக் கருவிகள் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு இதுவரை கண்டறியப்படவில்லை.

மனவளர்ச்சிக் குறை நாடு, மொழி, இனம்,சாதி, மதம், ஆகியவற்றைக்

கடந்த ஒன்று. ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கோ இனத்தவர்களுக்கோ இக்குறை ஏற்படுவதில்லை. மனவளர்ச்சி குன்றிய குழந்தை கடவுளின் சாபம் என்றோ கடவுளின் பரிசு என்றோ கருதாமல் மற்ற சாதாரண குழந்தைகளைப் போல நினைத்து அதன் தேவைகளையும் வசதிகளையும் சரியான விதத்தில் ஏற்படுத்திக் கொடுப்போமானால் அதுவே நாம் அக்குழந்தைகலுக்குச் செய்யும் உண்மையான சேவை ஆகும்.

உடல் ஊனம், பார்வை குறைவு, காது கேளாமை போன்றவை கணிசமாக்க் குரைந்து வரும் இக்காலத்தில் மனவளர்ச்சிக் குறையோ அதிகரித்து வருகிறது. மனவளர்ச்சிக் குறை மட்டுமின்றி மூளைவாதம், கற்றல் குறைபாடு போன்றவையும் அதிகரித்து வருகின்றன.

மனவளர்ச்சிக் குறை என்பது ஒரு தனிப்பட்டவரின் பிரச்சனை என்பதை மறந்து முழுச் சமூகத்தின் பிரச்சினை என்பதை மறந்து முழுச் சமூகத்தின் பிரச்சினை என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு வெறும் அன்பும் அரவணைப்பும், பரிவும் பாதுகாப்பும் மட்டுமே போதுமான தல்ல. அவர்களைச் சமூகத்தின் அங்கத்தினர்களாக அங்கீகரிப்பது ஒன்று தான் அவர்களுக்கு நாம் செய்யும் மாபெரும் உதவியாகும். ஆகவே உண்மையான புனர்வாழ்வுத் திட்டமாகும்.

கு.பவித்ரா
இரண்டாம் ஆண்டு இளங்கலை நுண்ணுயிரியல்

## ஐக்கிய நாடுகள்

ஐக்கிய நாடுகள் நாள் அக்டோபர் 24, 1945 அன்று நிறுவப்பட்டது. இந்த ஐக்கிய நாடுகள் சபையில் 192 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். இது 1945 ஜூன் 26 ஆம் நாள் கையெழுத்தானது.

உலக அரங்கில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்துதல், அனைத்து நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்

நாடுகளுக்கிடையேயான சிக்கலை அமைதியான முறையில் தீர்த்தல்

பொதுச்சபை, பாதுகாப்புமன்றம், பொருளாதார மற்றும் சமூக மன்றம் செயலகம், தர்மகர்த்தா அவை பன்னாட்டு நீதிமன்றம் ஆகியன இதன் முக்கிய அமைப்புகள் ஆகும்.

இது ஒரு நிரந்தரமான அமைப்பு ஆகும். இது அனைத்து நடவடிக்கைகளை கலந்தாய்வு செய்து தனது பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் உடையது.

இந்த அமைப்பில் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளன. அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு, இங்கிலாந்து, சீனா இவை தவிர பத்து நாடுகள் உள்ளன. பொருளாதார மற்றும் சமூக மன்றத்தில் 54 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களின் பதவிக்காலம் ஒன்பது ஆண்டுகள் ஆகும். மூன்றில் ஒரு பகுதியினர் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி விலகுவர்.

ஐ.நா. அவையின் கீழுள்ள சில நாடுகளை தர்மகர்த்தா அவை கண்காணிக்கிறது. இதில் உறுப்பு நாடுகளாக இருக்கும் நாடுகள் ஒரு பிரதிநிதியை அவைக்கு அனுப்ப வேண்டும்.

ஐநா அவையின் நீதிமன்றம் பன்னாட்டு நீதிமன்றம் எனப்படும். இது நெதர்லாந்தில் தி ஹேக் நகரில் அமைந்துள்ளது. இதில் 15 நீதிபதிகள் இடம் பெற்றுள்ளனர். இவர்களை பொதுச்சபை, பாதுகாப்பு மன்றம் தேர்ந்தெடுக்கும்.

ஐ.நா சபையின் நிர்வாகப் பணிகளை தலைமைச் செயலகம் நிறைவேற்றுகிறது. இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும்.

கு. ஆனந்த்

இளங்கலை வேதியியல் முதலாம் ஆண்டு




## பொது அறிவு

# இந்த மாதத்தின் முக்கிய தினங்கள்

➲நவம்பர் – 6

➲**சர்வதேச போர் மற்றும் ஆயுத மோதல்களின் சுற்றுச்சூழல் சுரண்டல் தடுக்கும் தினம்** (International Day for Preventing the Exploitation of the Envirenment in war and Armed Confliet) போர் மற்றும் ஆயுத மோதல்களால் இயற்கை பலவிதங்களில் சேதமடைகிறது. பயிர்கள், தண்ணீர் விநியோகம், தண்ணீர் விசமாதல், காடுகள் எரிதல், காடுகள் அழிக்கப்படுதல்.

➲**மேரி கியூரி பிறந்த தினம்** (Marie Gurie Birth Day): மேரி கியூரி 1867ஆம் ஆண்டு நவம்பர் 7 அன்று போலந்து நாட்டில் பிறந்தார். இவர் ரேடியம், பொலோனியம் போன்ற கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டுபிடித்தார். இவர் இயற்பியலுக்கான நோபல் பரிசினை 1903ஆம் ஆண்டிலும், வேதியியலுக்கான நோபல் பரிசினை 1911ஆம் ஆண்டிலும் பெற்றார். உலகில் இரண்டு பரிசுகளைப் பெற்ற முதல் பெண்மணி இவரே ஆவார்.

➲நவம்பர் – 9

➲**சர்வதேச கின்னஸ் உலக சாதனைகள் தினம்** (International Guinness World Records Day): கின்னஸ் பிரிவெரி என்பவர் உலக சாதனைகளைத் தொகுத்து 1954ஆம் ஆண்டில் முதன்முதலாக கின்னஸ் புத்தகத்தை வெளியிட்டார். உலக சாதனை புரிபவர்கள் கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தனர். முதன்முதலாக கின்னஸ் தினம் 2005ஆம் ஆண்டு நவம்பர் 9 இல் கொண்டாடப்பட்டது. கின்னஸ் சாதனைகளைத் தொகுத்து இத்தினத்தின்போது புத்தகமாக வெளியிடப்படுகிறது.

➲நவம்பர் – 10

➲**உலக அறிவியல் தினம்** (World Science Day): உலக அறிவியல் தினம் 1994ஆம் ஆண்டு நவம்பர் 10 அன்று முதன்முதலாக கொண்டாடப்பட்டது. இத்தினம் உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்காகவே

கொண்டாடப்படுகிறது. அறிவியல் மக்களுக்கே, அறிவியல் நாட்டிற்கே என்கிற விழிப்புணர்வை ஏற்படுத்தவே இத்தினம் கொண்டாடப்படுகிறது. சிறந்த ஆய்வுகளில் ஈடுபடும் இளம் விஞ்ஞானிகளுக்கு யுனெஸ்கோ விருதுகள் வழங்கி இத்தினத்தில் கௌரவிக்கிறது.

➲நவம்பர் – 12

➲**உலக நுரையீரல் அழற்சி தினம்** (World Pneumonia Day): நிமோனியா என்பது நுரையீரல் இழையங்களின் அழற்சியாகும். இது கிருமித்தொற்றினால் ஏற்படுகிறது. இதனால் இருமல், காய்ச்சல், அதிக வியர்வை, பசியின்மை அதிகளவு சளி மற்றும் அசௌகரிய நிலை என்பன காணப்படும். சிகிச்சை அளித்தால் பூரண குணமடையலாம். இந்த நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த 2009ஆம் ஆண்டில் இத்தினத்தை உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.

➲நவம்பர் – 14

➲**உலக சர்க்கரை நோய் தினம்** (World Diabetes Day): சர்க்கரை நோய் என்பது வலியில்லாமல் ஆளைக்கொல்லும் நோயாக உள்ளது. இந்த நோய்க்கு இன்சுலின் மருத்தினை பிரட்ரிக் பான்ரிங் என்பவர் 1921இல் கண்டுபிடித்தார். இவரின் பிறந்த தினமான நவம்பர் 14ஐ உலக சர்க்கரை தினமாகக் கொண்டாடுகின்றனர். சர்க்கரை நோயாளி இல்லாத உலகைக் காண்போம் என்கிற நோக்கில் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲நவம்பர் – 16

➲**சர்வதேச சகிப்புத் தன்மை தினம்** (International Day for Tolerance) யுனெஸ்கோ அமைப்பு தனது 50ஆவது ஆண்டு விழாவை 1995ஆம் ஆண்டில் கொண்டாடியது. யுனெஸ்கோ தனது சகிப்புத் தன்மை கோட்பாடு மற்றும் திட்டங்களை தயாரித்து நவம்பர் 16 இல் வெளியிட்டது. உலக அமைதியை உருவாக்கியது மட்டுமல்லாமல், அரசியல் மற்றும் சட்ட ரீதியான விழிப்புணர்வை ஏற்படுத்தவே 1996ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲**உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்** (World Chronic Obstructive Plumonary Digsease Day) நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோயால் சுமார் 210 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு 2007ஆம்

ஆண்டு கணித்துள்ளது. புகையிலை, ரசாயனப் புகை, காற்று மாசுபாடு போன்ற பல காரணங்களால் 2030ஆம் ஆண்டில் உலகளவில் இந்த நோயால் அதிக மரணம் ஏற்படப் போகிறது என எச்சரித்துள்ளது. இந்நோய் பற்றிய புரிதலை மக்களிடம் ஏற்படுத்த 2002ஆம் ஆண்டில் இத்தினம் அறிவிக்கப்பட்டது.

➲நவம்பர் – 17

➲**உலக குறைப்பிரசவ குழந்தை தினம்** (World Prematurity Day) உலக முழுவதும் ஆண்டிற்கு 15 மில்லியன் குறைப்பிரசவக் குழந்தைகள் பிறக்கின்றன. அதாவது 10 இல் 1 குழந்தை குறைப்பிரசவத்தில் பிறக்கிறது. ஒரு குழந்தை 37 வாரத்திற்கு குறைவாகப் பிறந்தால் அது குறைப்பிரசவம். குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு எதிர்ப்புச்சக்தி குறைவாக இருப்பதால் பல்வேறு நோய்கள் தொற்றிக்கொள்ளும். இது சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்த இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲**சர்வதேச மாணவர்கள் தினம்** (International Students Day) செக்கோஸ்லோவோக்கியாவின் தலைநகர் பிராக்கில் சார்லஸ் பல்கலைக்கழகத்தில் மாணவர் போராட்டம் 1939ஆம் ஆண்டு நவம்பர் 17இல் நடந்தது. நாஜிப் படையினரால் போராட்டம் நசுக்கப்பட்டதோடு 10 மாணவர்கள் தூக்கிலிடப்பட்டனர். மாணவர்களின் எழுச்சியை சர்வதேச அளவில் நினைவூட்ட ஆண்டுதோறும் நவம்பர் 17 அன்று சர்வதேச மாணவர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲நவம்பர் – 19

➲**உலகப் கழிப்பறை தினம்** (World Toilet Day) உலக நாடுகளில் 2.5 பில்லியன் மக்கள் சுகாதாரத்தைப் பேணுவதில்லை. 1.1 மில்லியன் மக்கள் திறந்தவெளிக் கழிப்பறைகளை பயன்படுத்தி வருகிறார்கள். இதனால் ஆண்டுதோறும் 2 லட்சம் குழந்தைகள் நோயால் பாதிக்கின்றனர். இவர்களைப் பாதுகாக்க, உலக சுகாதாரத்தைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை நவம்பர் 19 ஐ உலகக் கழிப்பறை தினமாக 2013ஆம் ஆண்டில் அறிவித்தது.

➲நவம்பர் – 20

➲**ஆப்பிரிக்க தொழில்மயமாக்கல் தினம்** (Africa Industrialization Day) ஆப்பிரிக்கா

இயற்கை வளம் நிறைந்த நாடு. கடுமையாக உழைக்கும் தொழிலாளர்கள் நிறைந்த நாடு. ஆனால் தொழில் வளர்ச்சி ஏற்படாததால் பஞ்சம், பசி, பட்டினி போன்றவை நிரந்தரமானதாக உள்ளது. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வன்முறை, உணவுப் பஞ்சம் போன்ற மிகப் பெரிய சவால்கள் உள்ளன. ஆகவே ஆப்பிரிக்காவின்மீது ஐ.நா. தனிக்கவனம் செலுத்தி நவம்பர் 20ஐ ஆப்பிரிக்க தொழில்மயமாக்கல் தினமாக அறிவித்தது.

➲**சர்வதேசக் குழந்தைகள் தினம்** (Universal Children's Day): ஐ.நா. பொதுச்சபை குழந்தைகளின் நலனையும், உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் 1954ஆம் ஆண்டில் குழந்தை உரிமைகள் சட்டத்தைக் கொண்டுவந்தது. வறுமை, எட்ய்ஸ் போக்கவும், குழந்தைகளுக்கு வராமல் தடுக்கவும், யுனிசெஃப் முயன்று வருகிறது. குழந்தைகளின் நலனைப் பாதுகாக்க ஐ.நா. சபை 1954ஆம் ஆண்டில் நவம்பர் 20ஐ சர்வதேசக் குழந்தைகள் தினமாக அறிவித்தது.

➲நவம்பர் – 21

➲**உலகத் தொலைக்காட்சி தினம்** (World Television Day) உலக நாடுகள் அமைதி, பாதுகாப்பு, பொருளாதாரம், சமூக மாற்றங்கள் மற்றும் தமது கலை, கலாச்சாரம் போன்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தமக்கிடையே பரிமாறிக் கொள்வதற்கு இத்தினம் சிறப்பானதாக கருதப்படுகிறது. ஐ.நா. சபையானது 1996ஆம் ஆண்டு டிசம்பர் 17 அன்று நவம்பர் 21 ஐ உலகத் தொலைக்காட்சி தினமாக அறிவித்தது.

➲நவம்பர் 3ஆம் வியாழன்

➲**உலக தத்துவ தினம்** (World Philosophy Day) நீதி, நேர்மை மற்றும் சுதந்திரத்தை தத்துவங்கள்மூலம் வழங்க முடியும் என யுனெஸ்கோ கருதுகிறது. தத்துவங்களால் மக்களிடம் அமைதியைக் கொண்டுவரமுடியும். தத்துவங்களே உலகை ஆள்கின்றன. தத்துவத்தின் முக்கியத்துவத்தை இளைஞர்களிடம் கொண்டுசேர்த்துப் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்கிற நோக்கில் யுனெஸ்கோ உலக தத்துவ தினத்தை அறிவித்துள்ளது.

➲நவம்பர் – 24

➲**படி வளர்ச்சி நாள்** (Evolution Day) சார்லஸ் டார்வின் உயிரினங்களின் தோற்றம் என்கிற நூலை 1859ஆம் ஆண்டு நவம்பர் 24 அன்று

வெளியிட்டார். நூல் வெளியிடப்பட்ட நாள் படிவளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது. உயிரினங்களின் தோற்றம் நூல் வெளியிடப்பட்ட 150ஆவது ஆண்டு நிறைவு விழாவானது 2009ஆம் ஆண்டு உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

➲நவம்பர் – 25

➲**சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு தினம்** (International Day for the Elimination of Violence Against Women) உலகளவில் பெண்கள், பலவிதமான வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளி உலகிற்குக் காட்டி அதற்கான, நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும். ஐ.நா. சபை 1999ஆம் ஆண்டு டிசம்பர் 17இல் கூடியபோது ஆண்டுதோறும் நவம்பர் 25ஆம் நாளை பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினமாகப் பிரகடனம் செய்தது.

➲நவம்பர் – 26

➲**உலக உடல் பருமன் எதிர்ப்பு தினம்** (World Anti-Obesity Day) கட்டுக்கு மீறிய வகையில் உடல் பெரிதாக சதைப் போடுவதை உடல் பருமன் அல்லது உடல் கொழுப்பு என்கின்றனர். அதீதமாக கொழுப்பு சேருவது உடல் நலத்துக்கு ஆபத்தானது. உடல் பருமன் ஒரு பெரிய சுகாதாரப் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. உடல் பருமனால் ஆண்டிற்கு 2.6 மில்லியன் மக்கள் உளகளவில் இறக்கின்றனர். உடல் பருமனால் ஏற்படும் தீமையை விளக்கவே இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲நவம்பர் – 29

➲**சர்வதேச பாலஸ்தீன மக்கள் ஒற்றுமை தினம்** (International Day of Solidarity With the Polestinian People Day) அமைதி திரும்பாமல் தொடர்ந்து கலவரம் நடக்கும் ஒரே நாடு பாலஸ்தீனம்தான். ஐ.நா. பொதுச்சபை பாலஸ்தீனத்தில் அமைதி மற்றும் மக்களின் உரிமையைப் பாதுகாக்க பலமுறை முயன்றது. இருப்பினும் பிரச்சினை தீர்க்க முடியாமல் போனது. பாலஸ்தீன மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒற்றுமையைக் கொண்டுவர 1979ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

# கருத்தரங்க அழைப்பிதழ்

*கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரியின்* (துன்னாட்சி) ***தமிழ்த்துறையும் காவ்யா பதிப்பகமும்*** *இணைந்து நடத்தும் தேசியக் கருத்தரங்கம்.*

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு**

**தமிழ்த்துறை &**
**காவ்யா பதிப்பகம் (சென்னை)**

இணைந்து நடத்தும்

**தேசியக் கருத்தரங்கம்**

**கருத்தரங்கப் பொருண்மை**

**தமிழிலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும்**

**அறிவிப்பு மடல்**

**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.**
**தமிழ்நாடு. இந்தியா.**
Email :ba_tamil@ksrcas.edu
website : Ksrcas.edu

பேரன்புடையீர்!

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை, இளங்கலைப் பட்டப் படிப்புடன் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் எனும் ஆராய்ச்சிப் படிப்புகளைச் செவ்வனே செயல்படுத்தி வருகிறது. தமிழ் ஆய்வுகளைச் சிறப்புடன் செய்து வரும் இத்தமிழ்த்துறையில் பல்வேறு கருத்தரங்குகளும், பயிலரங்குகளும் நடைபெற்றுள்ளன.

"செவ்வியல் மொழிகள் இலக்கியங்கள் இலக்கணங்கள்" எனும் தலைப்பிலும், தஞ்சைத் தமிழ் ஐயா கல்விக்கழகம் ஒளவை கோட்டத்துடன் இணைந்து "காப்பியத்தமிழ்" எனும் தலைப்பிலும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன.

"நாட்டுப்புற மண்ணும் மரபும் மக்களும்" என்ற தலைப்பிலும், மைசூர் தென்னிந்திய மொழிகள் மையத்துடன் இணைந்து 'The Role of Grammar in Second Language Teaching" எனும் தலைப்பிலும், சிவகாசி பட்டாசுநகர் அரிமா சங்கம் சார்பில் "பல்துறை நோக்கில் கண்கள்" எனும் தலைப்பிலும் தேசிய கருத்தரங்குகள் நடத்தப்பெற்றுள்ளன.

"தமிழ் இணைய தளங்களும் வலைப் பூக்களும்" எனும் தலைப்பிலும், "தமிழ் உரைநடை" எனும் தலைப்பிலும், சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையுடன் "தொல்காப்பியம் கற்பித்தல் உத்திகள்" எனும் தலைப்பிலும், மேலும் கல்வெட்டுகளின் வரலாறும் வாழ்வியலும் மற்றும் பத்துப்பாட்டு பதிப்பியல்புகளும் நெறிமுறைகளும் உரை நெறிகளும் எனும் தலைப்புகளிலும் பயிலரங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

கல்லூரி மாணவர்களிடையே படைப்பாக்கத் திறனை உருவாக்கும் எண்ணத்துடன் 2008 ஆம் ஆண்டு முதல் 'விடியல்' எனும் மாத இதழை வெளியிட்டு வருகிறது. படைப்பாற்றல் திறனுக்கெனப் 'பொன்மாலைப் பொழுது' எனும் அரங்கமும் 'கவியரங்கம்' என்ற நிகழ்வும் மாதந்தோறும் நடைபெற்று வருகின்றன.

இத்தமிழ்த்துறை நடத்திய அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்பாற்றிய பேராசிரியர்கள், ஆய்வாளர்கள்,ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் "தமிழிலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும்" எனும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம் தமிழ் இலக்கியங்களை வரலாற்றியல் பார்வையில் நோக்கும்போது அவ்விலக்கியங்கள் யாவும் சமுதாயப் பண்பாட்டுக் கலாச்சாரங்களை, சமூக மாற்றங்களை, மனித மன உணர்வுகளை நல்வழிப்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சியாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பண்பாட்டு, வாழ்வியல் செய்திகளைக் கண்டறிந்து கட்டுரை வழியாக எடுத்துரைக்க வேண்டுகிறோம்.

**கட்டுரைக்கான தளங்கள்**

* சங்க இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள்
* சங்க இலக்கியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்
* சங்கம் மருவிய இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும்
* பக்தி இலக்கியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்
* காப்பியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்
* சிற்றிலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும்
* உரைநடை இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள்
* தற்கால இலக்கியங்களில் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக் கூறுகள்
* நாட்டுப்புறவியலில் பண்பாட்டுக் கூறுகள் மற்றும் பண்பாட்டு நெறிமுறைகள்
* இவைபோல பிற இலக்கியங்களில் காணப்படும் செய்திகளையும் தலைப்புகளாக எடுத்துக் கொள்ளலாம்.

**கட்டுரையாளர் கவனத்திற்கு '..**

* பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் என அனைவரும் கட்டுரை எழுதலாம்.
* **கட்டுரைக்கான மொழி:**
* தமிழ், ஆங்கிலம்
* கட்டுரைகள் A4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் பாமினி(Baamini) எழுத்துருவில் அமைதல் வேண்டும்.
* ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் எழுதினால் தனித்தனியே கட்டணம் செலுத்தப்பட வேண்டும். கட்டுரைகளை ஒன்றிற்கு மேற்பட்டோர் இணைந்து எழுதினால் கட்டணம் தனித்தனியே செலுத்த வேண்டும்.
* கட்டுரைகள் பதிப்புக்குழுவின் ஒப்புதலுக்குப் பிறகே ஏற்றுக்கொள்ளப்படும். தரமற்ற கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கட்டுரைகளில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்குப் பதிப்புக்குழுவிற்கு முழு உரிமை உண்டு.
* ஆய்வாளர்கள் தங்களின் கட்டுரைகளை நெறியாளர் பரிந்துரையுடன் அனுப்ப வேண்டும்.
* **கட்டணங்கள்**

| | |
|---|---|
| பேராசிரியர்கள் | : ரூபாய் 500 |
| ஆய்வாளர்கள், மாணவர்கள் | |
| ஆர்வலர்கள் | : ரூபாய் 400 |

***கட்டணங்களை**

**The Principal**

**K.S.Rangasamy college of Arts and Science(Autonomous), Tiruchengode** எனும் முகவரியில் திருச்செங்கோட்டில் மாற்றத்தக்க வரைவோலையாக (D.D) அனுப்பவும். ஒரு கல்லூரி, பல்கலைக் கழகத்தில் இருந்து பலர் பல கட்டுரைகள் எழுதி அனுப்பும் போது ஒட்டுமொத்தக் கட்டணத்தையும் ஒரே வரைவோலையாகத் (D.D) தனித்தனிப் பதிவுப் படிவங்களுடன் அஞ்சலில் அனுப்பலாம்.

* **கட்டுரைகள் வந்து சேர வேண்டிய இறுதிநாள் : 14.12.2015**
* கட்டுரையாளர்களுக்குக் கருத்தரங்க நாள் குறித்த அழைப்பிதழ் பின்னர் அனுப்பி வைக்கப் பெறும்.
* கட்டுரைகளை மின்னஞ்சல் செய்வதற்கு: Email : ba_tamil@ksrcas.edu

**கருத்தரங்க நாளன்று ISBN எண்ணுடன் ஆய்வுக்கோவை வழங்கப்படும்.**

**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்**

**முனைவர் ப. இராஜேஷ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு-637215.
நாமக்கல் மாவட்டம்
அலைபேசி : 9788849914

**கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி**

**முனைவர் சி.ரா. சுரேஷ்**
தமிழ்த்துறைத் தலைவர்
கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு-637215. நாமக்கல் மாவட்டம்
அலைபேசி : 9443434250, 9942834250

**பதிப்புக்குழு**

1. திரு. வீரா. முருகானந்தம்
2. முனைவர் த.கண்ணன்
3. திரு. ப. இராஜேஷ்
4. திருமதி சு. சாந்தி
5. முனைவர் து. சரஸ்வதி
6. முனைவர் கோ. இரவிச்சந்திரன்
7. முனைவர் ந. சங்கீதா
8. முனைவர் ம. லோகேஸ்வரன்
9. திரு. செ. தங்கராஜ்
10. முனைவர் த. சுந்தரராஜ்
11. திரு. எம். சதீஸ்குமார்
12. திருமதி ந. அர்ச்சனா
13. திருமதி ப. பிரதீபா
14. முனைவர் எஸ். முப்பிடாதி

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்செங்கோடு**
**தமிழ்த்துறை**
**&**
**காவ்யா பதிப்பகம் (சென்னை)**

இணைந்து நடத்தும்

## தேசியக் கருத்தரங்கம்

### பதிவுப் படிவம்

பெயர் :
கல்வித்தகுதி :
பணியிடம் (அ) பயிலும் நிறுவன முகவரி :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :
மின்னஞ்சல் முகவரி :
கட்டுரையின் தலைப்பு :
பதிவுக் கட்டண விபரம் :
தொகை :
வங்கி கிளை :
வரைவோலை எண் :
நாள் :

கருத்தரங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு கருத்தரங்கில் பங்கேற்க விரும்புகிறேன்.

நாள் : கையொப்பம்:

**(இப்படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்.)**

**<u>குறிப்பு</u>: கட்டுரை அனுப்புவதற்கான நாள் 31–12–2015 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.**